போர்வாள்

[ஆசி]ரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
[இ]ா. இளஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.

விலை அணா 1¼

[மல]ர் 1 | சென்னை 23—8—47 சனிக்கிழமை | வீச்சு 2

பண்டித ஜவகர்லால் நேரு, உற்பத்தி பெருக வேண்டும்—தொழிற்சாலைகள் ஓங்கவேண்டும் என்று ஓயாது முழக்கமிடுகிறார். ஆனால் அவருடைய அரசியல் குருவெனத் தகும் காந்தியாரோ குடிசைத் தொழில்கள் வளரவேண்டும்—இயந்திரத் தொழில்கள் மாய வேண்டும் என்று கிண்கிணிநாதம் எழுப்புகிறார். ஒருவர் விஞ்ஞானமே நல் வாழ்வுக்கு வழிகாட்டி என்கிறார். மற்றவர் பழமையே இந்தியர் பண்பாட்டிற்கு அறிகுறி என உரைக்கிறார். இயந்திர சாதனமே இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அடைப்படை என்பது முன்னவர் கருத்து. இயந்திரங்கள் மனிதனை விழுங்கும் பூதங்கள் என்பது பின்னவர் முடிவு. புதிய புதிய மோட்டார்களும் பெரிய பெரிய தொழிற்சாலைகளும் மேலும் மேலும் பெருகவேண்டும் என்பது நேருவின் கனவு. கைராட்டையில் பிறக்கும் கீதத்தையே நுகர்ந்து நுகர்ந்து களிப்பது காந்தியார் இயல்பு.



"கைராட்டையைச் சுழற்றுவோம்; கருப்பட்டியைக் காய்ச்சுவோம்; கைக்குத்தரிசியை உண்ணுவோம்; பனை ஓலையில் எழுதுவோம்; கைக்காகிதத்தையே பயனுறுத்துவோம்; பழங்காலத் திற்குச் செல்லுவோம்; பண்டை வாழ்வு வாழுவோம் இயந்திர நாகரிகம் வேண்டாம்; அதை எள்ளி நகையாடுவோம்." —இது காந்தியார்.

"பஞ்சாலைகள் எழுக; நுகர் பொருள்கள் வளர்க; மின்சார உற்பத்தி பெருகுக; புது வாழ்வு ஓங்குக; அறிவுக் கலைகள் பிறங்குக; எங்கணும் புது ஒளி வீசுக"—இது, பண்டித நேரு. இரண்டில் எது சரி? நேரு வகுக்கும் பாதையா? அல்லது காந்தியார் தீட்டும் திட்டமா? எது சரி? எது மக்கள் வாழ்வை வளமுறுத்துவது? விஞ்ஞானமா அல்லது காந்தீயமா? எது?

கோவைக் குமரனின் புதுக் கோலம்

அன்று சொன்ன கருத்து! இன்று மாறிய விந்தை!

புதுப் பரணி பாடும் மாயம் என்னவோ?

கோவைக் கோமான் சர். ஆர். கே. சண்முகம் இன்று இந்துஸ்தான் சர்க்காரின் நிதி அமைச்சர். பலமான மத்திய அரசாங்கம் வேண்டும் என்னும் புது முழக்கம் செய்பவர். வானொலிப் பேச்சிலும் "ஜே ஹிந்த" சொல்லத் தவருதவர். ஆரியமாவது திராவிடமாவது எல்லாம் ஒன்றுடன் ஒன்று கலந்து குழைந்து கூட்டுச் சரக்காகி நூற்றுண்டுகள் பல ஆய் விட்டன என்று "விளக்கவுரை" ஆற்றுபவர். இந்தியாவைப் பிளப்பதா—அது கூடாது. என்று உரத்த குரலில் கூறுபவர். நானோ ஹிந்து என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன் என்று சிறிதும் கூசாதுரைப்பவர்.

ஆனால் இதே சர். சண்முகம் 1940-ல் ஈரோட்டில் திராவிட நாட்டுப் பிரிவினைக் கருத்தை ஆதரித்துப் பேசினர். இந்தியா ஒரே நாடாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்று அழுத்தத் திருத்தமாய் ஆதார பூர்வமாய் விளக்கிக் காட்டினர் ஆரியர்-திராவிடர் பிரச்சினை மிகமிக நியாயமானது என்பதை அழகுற இயம்பினர்.

அறிஞர் சர். சண்முகம் அன்று சொன்ன கருத்திலிருந்து இன்று மாறிய விந்தைக்குக் காரணம் போர் வாளுக்குத் தெரியவில்லை. உங்களுக்காவது தெரிகிறதா? சண்முகனரின் அன்றைய பேச்சு இதோ உள்ளது, படித்து விட்டுப் பிறகு சொல்லுங்கள்:

இன்று ஆரியர்-திராவிடர் பிரச்சினை கிளம்பியுள்ளதில் எனக்கு விசனமோ ஆச்சரியமோ இல்லை.

ஆரியர்-திராவிடர் என்ற மொழிகளை பெரியாரோ சர். செல்வமோ உற்பத்தி செய்யவில்லை. பழம் தமிழ் நூல்களில், ஆரியர்-திராவிடர் என்ற மொழிகள் உள்ளன. ஆரியர்-திராவிடர் என்ற வேறுபாடு 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. சிலப்பதிகாரத்திலும் இது காணப்படுகிறது.

சிலப்பதிகாரம் 1800 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த சிலப்பதிகாரத்தில், தமிழ் மன்னர்களை, வடநாட்டு ஆரிய மன்னர்கள் இழிவாகப் பேசினர் என்பதற்காக, சேரன் செங்குட்டுவன் படை எடுத்துச் சென்று கனக விசயர் என்ற ஆரிய மன்னர்களை அடக்கியதாகக் கூறப்பட்டுளது.

இதிலிருந்து, தமிழ் மன்னர்[illegible]
ஆரியர்கள் இழிவுபடுத்தின[illegible]
என்பதும் இதனல் பேதமு[illegible]
விரோதமும் வந்தன என்ப[illegible]
விளங்குகிறது. எனவே [illegible]
யர்-திராவிடர் என்ற வழக்கு[illegible]
புதுமை ஒன்றுமில்லை. ஆரிய[illegible]
திராவிடர் பிரச்சினைபற்றிப் பே[illegible]
வதில் குற்றமும் ஒன்றுமில்லை[illegible]

"தமிழ்நாடு" என்பது பு[illegible]
கருத்தா? இல்லை பூர்வீக [illegible]
த்திலேயே "தமிழகம்" உ[illegible]
அதற்கு எல்லையும் வகு[illegible]
உள்ளனர். வடவேங்கட[illegible]
தென்குமரியும் தமிழகத்[illegible]
எல்லைகள் என்று குறிக்கப்[illegible]
டுள்ளன.

**தொன்றுதொட்டு தமிழ்நாடு[illegible]
தியாவினின்றும் வேறுபட்ட ஒரு
நாடாகத்தான் இருந்துவந்திருக்கி[illegible]
இது செல்வமோ பெரியாரோ கூ[illegible]
கட்டுக்கதையல்ல. இரண்டா[illegible]
ஆண்டுகளாக இருந்துவரும் விஷ[illegible]
இதனை ஒளித்து வைத்து விடுவத[illegible]
உணர்ச்சியை அடக்கிவைக்க [illegible]
யாது.**

ஆனல், இந்த உணர்ச்சி [illegible]
வரக் காரணம் என்ன எ[illegible]
தைத்தான் புத்திமான்கள் [illegible]
க்க வேண்டும். நல்லதோ [illegible]
டதோ, தமிழ்நாடு தமிழரு[illegible]
என்று பெரியார் (Parti[illegible]
suit) பாகப் பிரிவினை வ[illegible]
போட்டுவிட்டார். ஏன் பெ[illegible]
இந்த வழக்கு தொடுத்தார்[illegible]
பதைத்தான் அறிவாளிகள் [illegible]
ணிப்பார்க்க வேண்டும்.

(தொடர்ச்சி 8-ம்பக்கம் பார்[illegible]

[..]ழ்க்கை ஓவியம்!

நிர்மல கீதம்

[வெண்ணிலா]

அன்று என் அண்ணாவுக்குக் கலி[ய]ாணம்.

நான் சந்தனம் முதலியன வழங்[கு]வதிலும் எனக்குத் தெரிந்த நண்[பர்]களை வரவேற்பதிலும் முனைந்[தி]ருந்தேன். கலியாண வீட்டில் [பெ]ண் இங்குமங்கும் திரிந்துகொண்[டி]ருந்ததைக் கண்ட பெண்கள் [எ]ன்னைப்பற்றி வம்பளக்க ஆரம்[பி]த்து விட்டார்கள் என்று அந்தப் [ப]க்கம் சில சமயம் போக நேர்ந்ததி[லி]ருந்து அறிந்தேன். அவர்கள் [எ]ன்னைப்பற்றிப் பேசிய சில [கு]றும்பு வார்த்தைகள் என் காதில் [வி]ழுந்தன.

அப்போது நான் என் கடைக்[க]ண்ணால் அங்குக் கூடியிருந்த [பெ]ண்கள் கூட்டத்தைக் கவனித்[தே]ன். என் கண்களுக்கு முதலில் [பட்]ட உருவத்தின் கனிவான அன்[புப்] பார்வை என்னுள் ஒரு தனி [இ]ன்பத்தை எழுப்பியது. என் [க]ண்கள் அவ்வுருவத்தின் பருவ [அ]ழகினைப் பருகின. கண்கள் [ம]ட்டுமா என் இதயமே அவள் [அ]ழகில் தோய்ந்து கிடந்தது.

பிறகு பலமுறை அங்கு செல்ல[வு]ம் அவளை—என் இதய தேவியைப் [பா]ர்க்கவும் நானே சந்தர்ப்பம் ஏற்[ப]டுத்திக் கொண்டேன். என் இத[ய]த்துள் ஏதோ ஓர் ஒளி பரவி என் [னை]ப் புளகாங்கித மடையச் செய்[த]து.

அவளுடைய கனிவான பார்வை [எ]ன் நன்றி செலுத்தும் முறையில் [அ]வளைப் பலமுறை பார்த்தேன். [ஒ]வ்வொரு முறையும் அவளுடைய [க]ண்கள் புதுப்புது சேதி பேசின. [அ]ச் செய்தியை அறிந்து கொள்[வ]தற்கு என்னுடைய உள்ளம் [தா]ன் எவ்வளவு துடிதுடித்தது!

[க]லியாணம் மூன்றே நாட்கள். [அ]ம் மூன்று நாட்களில் பல[மு]றை எங்கள் "கண்ணொடு கண்[ணி]ணை நோக் கொக்கப்" பார்த்து [கொண்டி]ருந்தோம். அவளோடு பேச

[...]தில் எழுந்தது. அவளுக்குத்தான் இந்தப் பாழும் வெட்கம் வந்து கவிந்து கொண்டு வதைக்கிறது. எனக்கோ நாவெழ மறுக்கிறது. இப்படி இருந்தது எங்கள் நிலை.

இரண்டுநாட்கள் ஓடி மறைந்தன. மூன்றும்நாள் இரவு நெருங்கியது. என் மனம் வேதனையால் வாடியது. அன்று இரவு எல்லோரும் அவரவர்கள் சாமான்களைச் சேகரிப்பதிலும் மூட்டை கட்டுவதிலும் கவலையாக இருந்தனர். அதனால் எல்லோரும் அவ்வீட்டில் இங்குமங்கும் திரிந்து கொண்டிருந்தனர்.

என் அருமைக் காதலி மட்டும் தனியாக எங்கோ ஓர் அறையில் புதைந்துகிடந்தாள். அவள் உள்ளத்தைப் பிரிவுத்துன்பம் வாட்டுகிறது என்பதை நான் குறிப்பாக உணர்ந்து கொண்டேன். இதை நினைக்க நினைக்க என் உள்ளம் ஏங்கித் தவித்தது. எனக்கும் அதே நோய்தானே! நோயை நோய் உணர்ந்து கொண்டது! அதில் என்ன ஆச்சரியம்! என் அண்ணாவின் மாமி படுக்கைகளை எல்லாம் கட்டிக் கொண்டிருந்தாள். அவள் எதற்கோ "நிர்மலா, இங்கேவா" என்று யாரையோ கூப்பிட்டாள். நான் அப்போது அங்கிருந்தேன்.

"இதோ வந்தேன் அம்மா" என்று பதில் வந்தது. பிறகு அங்கு ஒரு பெண் தோன்றினாள். அவள் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றாள். நானும் அவளைக் கண்டதும் வியப்பில் ஆழ்ந்தேன். என் இதயத்தைக் கவர்ந்த அந்த இன்ப வல்லி வேறுயாருமல்ல என் அண்ணியின் தங்கை என்றுணர்ந்த போது நான் வியப்புறுதிருக்க முடியுமா?

அன்றுஇரவு முழுவதும் அவளைப் பற்றி நினைப்பதிலேயே என் உள்ளம் முனைந்து நின்றது. நான் ஒரு கணம் அவளது அன்றலர்ந்த அல்லிமலர் போன்ற முகத்தை நினைப்

தோன்றும் ஒளியை எண்ணுவேன். அஃதற்குள், எழுதாத கவிதை--அவள் வாழி என வாழ்த்துச் சொல்லுவேன். சொல்லி முடிப்பதற்குள் அவளுடைய சொல்லின் 'சொகுசு' என் நெஞ்சில் நடமாடும். அதே நேரத்தில் என்னை அறியாமலே என்வாய் "நிர்மல" கீதம் இசைக்கக் கண்டேன்...............

மறுநாள்காலை எல்லோரும் ஊருக்குப் புறப்பட்டார்கள். அவளைப் பிரியவேண்டுமே என்ற எண்ணம் என்னைத் தவிதவிக்கச் செய்தது. கூடத்திலிருந்தேன் நான். நிர்மலா பக்கத்து அறையிலிருந்தாள். நான் அவளைப் பார்த்தேன். அவள் முகத்தில் கவலையின் சாயல் படர்ந்திருந்தது. "தற்செயலாய்க்" கூடத்துப் பக்கம் திரும்பிய அவள் வேதனையோடும் அன்போடும் என்னை நோக்கினாள். எங்கள் கண்கள் பேசின.

காலை எல்லோரும் ரயில்வே ஸ்டேஷனுக்குச்சென்றனர். நானும் பெண் வீட்டாரை வழியனுப்ப ஸ்டேஷனுக்குப் போனேன்.

எல்லோரும் ரயில் ஏறிவிட்டார்கள். என் நிர்மலாவின் தம்பி தயாநிதிமட்டும் என்னிடம் அன்போடு பிளாட்பாரத்தில் பேசிக்கொண்டிருந்தான். நான் நிர்மலாவை அடிக்கடி பார்த்துக் கொண்டே இருந்தேன். அவள் அன்புருவம் என்னைப் பார்ப்பதிலேயே லயித்திருந்தது. அவள் பார்வை ஐயோ! நான் தயாநிதியாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று அவள் ஏங்குவது போன்றிருந்தது.

வண்டி புறப்படும் சமயம் என் மாமி என்னை அழைத்துப் போய் விட்டு வருகிறேன் என்றாள். ஆனால் அவள்—என் நிர்மலா.........நான் என்தலையை அசைத்தேன். தயாநிதி வண்டியில் ஏறிக்கொண்டான்.

நான் நிர்மலாவைப் பார்த்தேன் எங்கள் கடைசிப் பார்வை ஒன்றிய

எதிரொலியாக விளங்கியது. வண்டி புறப்பட்டுவிட்டது. அது மறையும் வரை நிர்மலாவையே பார்த்திருந்து விட்டு வீடு திரும்பினேன்.

நாட்கள் பல ஓடி மறைந்தன. என் உள்ளம் அவள் அழகை நினைத்து நினைத்து இன்புற்று ஏங்கியது. இரண்டு மாதங்கள் கழிந்தன. இதற்குள் என் அண்ணவின் மனைவியையும் இங்கு அழைத்து வந்து விட்டார்கள். நான் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நிர்மல குமாரியையே எண்ணி உளம் பூரித்துக் கிடந்தேன்.

திடீரென்று ஒரு நாள் எனக்கு ஒரு தந்தி வந்தது. அதில் "உடனே புறப்பட்டு வரவும்" என்று எழுதியிருந்தது. தந்தியை என் அண்ணவின் மாமனர் அனுப்பி இருந்தார். தந்தியைக் கண்டதும் என் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நிர்மலாவைப் பார்க்க போகிறேம் என்ற எண்ணம் எனக்கு எல்லையற்ற இன்பத்தை அளித்தது.

என் தாயாரிடமும், அண்ண, அப்பா எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு ஊருக்குக் கிளம்பினேன். என்னைக் கண்டதும் அங்கு எல்லோருடைய முகமும் மலர்ந்தது.

என் மாமி என்னைத் தனியாக அழைத்துச் சென்று "தம்பி, நாங்கள் இங்கு வந்து பத்து நாட்கள் ஆனதும் நிர்மலாவுக்குச்சுரம் கண்டது. அவள் பலவீனமாகப் படுக்கையிலேயே பல நாட்கள் கிடந்தாள். நாளுக்கு நாள் சுரம் அதிகரித்து வந்தது. இப்போது அவள் சில சமயம் ஏதாவது தூக்கத்தில் பிதற்றுகிருள். சென்ற இரண்டு மூன்று நாட்களாக நாங்கள் அவள் பிதற்றுவதைக் கவனித்துவந்தோம் அவள் அடிக்கடி உன் பெயரைக் குறிப்பிட்டு 'ஐயோ, அவர் எப்படி இருக்கிறரோ என் உயிர் போவதற்குள் என்னைப் பார்க்க வருவாரா!' என்று பிதற்றவே எங்களுக்குப் பயம் அதிகரித்தது. அவள் அப்பாவும் நானும் உன்னை இங்கு வரவழைப்பது நல்லது என்று முடிவு செய்தே தந்தி கொடுத்தோம்" என்று சொல்லி

தலை குனிந்தேன். அவள் என் உள்ளத்தை அதிலேயே அறிந்து கொண்டாள்.

எனக்கு நிர்மலாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்துக்கொண்டே இருந்தது.

அப்போது அங்கு நிர்மலாவின் தந்தை வந்தார். என்னை வரவேற்றுவிட்டு நிர்மலா இருந்த அறைக்கு அழைத்துச் சென்ருர்.

நான் அவரைத் தொடர்ந்தேன், நிர்மலாவின் கட்டிலண்டை நின்று அவளையே உற்றுப் பார்த்தேன். அவள் தூங்கிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்குப்பின், "ஆ, வந்துவிட்டீர்களா!" என்று கண்களை மூடிக்கொண்டே பிதற்றினுள்.

"நிர்மலா, நிர்மலா" என்று கூப்பிட்டேன். அவள் கண்கள் மலர்ந்தன. அவள் கனவுலகில் கண்டதை நினைவுலகில் காணவே அளவுகடந்த வியப்போடு என்னைப் பார்த்தாள். நான் திரும்பிப் பார்த்தேன். தயாநிதி என் அருகில் நின்றிருந்தான், அவனுக்கு எட்டு வயதிருக்கும். குழந்தை அவன் என்னைப் பார்த்தான், அறையில் வேறுயாரையும் காணும்.

நான் கட்டிலின்மேல் உட்கார்ந்தேன். நிர்மலா தன் மலர்ந்த மிரளும் இரு கண்களால் என்னையே உற்றுப் பார்த்தாள்.

பிறகு "வந்துவிட்டீர்களா? நிசமாகவா? இது என்ன கனவா?" என்ருள் வியப்போடு. அவள் உதடுகள் துடித்தன.

"ஆம், வந்துவிட்டேன். என்னைப் பார்! உன் உடம்பு எப்படி இருக்கிறது?" என்றேன் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து விட்டு.

"நீங்கள் வருவீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை, என் உடம்புக்கு ஒன்றுமில்லையே" என்ருள் குறும்பாக. அவள் முகத்தில் சாந்தியின் ஒளி வீசிற்று.

நான், "நிர்மலா நீஎன்னைவிட்டுப் பிரிந்ததிலிருந்து உன்னை என்னல் மறக்கவே முடியவில்லை. என்னை எப்போதும் மறக்கமாட்டாயே" என்றேன் அவ்வளவு

"ஐயோ, என்னை இந்த நிலை கண்டபின்புமா உங்களுக்கு இ சந்தேகம்?" என்ருள் கொ சுதலாக.

"நிர்மலா, என் உள்ளம் குள தது" என்றேன்.

நிர்மலா என் கைகளைக் கெ யாகப் பற்றினுள். நாங்கள் இன் சிகரத்தை எட்டிப் பிடித்தே அவள் மெய்ப்பாடு என் உடல கனை வெறிகொள்ளச் செய்தது

என் மாமி "தயாநிதி" எ கூப்பிட்டுக் கொண்டே வந்த நான் எழுந்து நின்றேன். அவள் மலாவுக்குப் பால் கொடுத்து வி என்னைச் சாப்பிட அழைத்த அப்போது கூட எனக்கு நி லாவை விட்டுப் பிரிய மனமில் நிர்மலா, இதோவந்து விடுகிறே என்று சொல்லி அவ்வறை விட்டு வெளியே சென்றேன்.

நான் சாப்பிட்டு விட்டுக் கைய பிக் கொண்டிருந்தேன். ஏதோ சுக்குரல் கேட்டது... உற்றுக் டேன்.

"ஜாதகப் பொருத்த மெல் சரியாய்த்தான் இருக்கு. நாளை முகூர்த்தநாள் குறிப்பிட்டு ரேன்" என்றது ஒரு புதுக்குர

எனக்கு விஷயம் புரிந்துவிட் இவர்களுக்கு எப்படி என் ஜா கிடைத்தது என்பதெல்லாம் ஆ ரியமாய்த்தான் இருந்தது.

என் மாமா விடம் "நான் திரி வண்டிக்குப் புறப்படுகிறே என்றேன். ஆனல் நான், கழுத்தைப் பிடித்துத் தள்ள கூடப்போகத் தயாராகஇல்லை பதுதான் அவருக்குத் தெரிய அவர் இரண்டு நாளைக்கு இ விட்டுப் போகலாமே என்ருர்.

நான் சிரித்து விட்டுப் பேச இருந்துவிட்டேன்.

நிர்மலா இருமலால் அவதிப் சப்தம் கேட்டது. நானும் மாம அவளறைக்குச் சென்றேம்.

அவள் "அப்பா, தண் என்ருள் அவர் தண்ணீர் கொ வர வெளியே போனுர்.

அவள் மெலிந்த உடல் அந் மலின்பெருமலைத்தாளாதுதவி

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பா

தமிழா உன்னைத்தான்!

இளஞ் செழியன்

அன்பும் ஆர்வமும் படைத்த இளந்தமிழா! உன்னைத்தான் உன் நாடு அழைக்கிறது; புது உலகம் அழைக்கிறது; புது உலக சமுதாயம் அழைக்கிறது; ம்; தமிழகம்—திராவிடம் உன் தொண்டைத்தான் எதிர்பார்க்கிறது.

கடமையில் கருத்தும் உள்ளத்தில் உரமும் உண்டு உன்பால், உன் வாழ்க்கையில் வளம் இல்லாவிட்டாலும்.

நாட்டு நலிவுகள் துடைக்கப்படவேண்டும் என்பதிலே அடங்காத ஆர்வமும் ஆர்வத்தில் விளைத்த அஞ்சாத நெஞ்சமும் உண்டு உன்பால், வறண்ட பாலையில் நீ உலவினாலும்.

தமிழகத்து மறுமலர்ச்சி, உன் னையார்தம் எண்ணத்தால், எழுச்சியால் சொல் உரத்தால், செயல் வளத்தால் அச்சமற்ற ஆண்மைத் திறத்தால்—இவற்றால்தான் ஏற்படவேண்டும்.

இன்று நீ வாழ்க்கையின் அடித்தளத்தில் உலவுகிறாய். அந்த உளுத்துப்போன பழைய உலகம் உன் உழைப்புக்குத் தந்த பரிசு வறுமைதான். நீ உழைத்து உழைத்து உருமாற உன் உழைப்பின் பலனை வேறு கூட்டம்தான் நுகர்ந்து கொண்டிருக்கிறது, இதுநாள்காறும். இன்றைய சமுதாய அமைப்பு உழைக்க ஒரு கூட்டத்தையும் உண்ண ஒரு கூட்டத்தையும் அமைத்துவிட்டது. அறமுறை இழந்தது—ஆனால் பலம் பொருந்திய இருப்புக் கோட்டை இச் சமுதாயம். இதன் அடிப்படை உன்னால்தான் தகர்த்தெறியப்படவேண்டும்.

வளையாத உள்ளம் படைத்த இளந்தமிழா! இதோ செந்தமிழ்நாடு உன்னை அழைக்கிறது, எழுந்திரு. சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும்; பழமைப் பாசியைத் துடைத்திட வேண்டும்; வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி முரசு கொட்ட வேண்டும். இத்தனைக்கும் உன் தொண்டு தேவை; உடனடியாகத் தேவை. இனியும் நீ ஒதுங்கிப் பதுங்கல் ஆகாது. **"சிற்புட் பறவையே சிறுத்தையே வெளியில் வா. எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலி எனச் செயல் செயப் புறப்படு வெளியில்."**

இதோ பார் உன்னைப் பெற்ற தமிழகம்! பொன் விளையும் நாடு என்று புலவர்கள் பூரிப்புடன் போற்றிய நாடுதான் இது; ஆனால் இன்று வறுமைக்குத் தொட்டிலாய் வாழ்கிறது.

ரோம் நாட்டிற்கு அகிலும் தேக்கும் தந்த இத் தமிழ் நாடுதான் இன்று நுகர் பொருள் அத்தனைக்கும் வெளிநாட்டை எதிர்பார்க்கிறது.

சுமேரியருக்கும் எகிப்தியருக்கும் நாகரிக வாழ்வியலைக் கற்பித்த இந்நாடு, பத்து விழுக்காடு படித்தவர்களைக் காட்டுகிறது இன்று.

இமயத்தில் தம் இலச்சினை இட்ட வில்லவரும் மீனவரும் நடமாடிய இந் நாட்டில் செத்த வாழ்வு வாழும் "செந்தமிழர்" உலவுகின்றனர் இன்று.

'முகிலும் செந்நெலும் முழங்கு நன் செய், முல்லைக் காடு மணக்கும் நாடு' என்றெல்லாம் பாராட்டப்பட்ட இந்நாட்டில், இன்று உண்ணும் உணவுக்கும் பஞ்சம். நீ எண்ணிப்பார்; தமிழகத்தில் இந்த நிலை இருக்கலாமா இனியும்? இருக்க விடலாமா?

தமிழா, நீ இங்கு வா! இது உன் சமுதாயம். "ஆயிரம் உண்டிங்கு சாதி" என்று கவிஞர்களாலேயே சித்தரிக்கப்பட்ட சமுதாயம். என் சமுதாயம், என் சமுதாயம் என்று நீ பெருமை பாராட்டிக் கொள்வதில்லையா, அதே சமுதாயம் தான் இது. ஒரு சமுதாயமா இது? இல்லை. ஓராயிரம் சமுதாயமாய்ச் சிதறுண்டு கிடக்கும் ஒரு கூட்டம். அதோ போகிறானே தொலைவாக, அவன் மேல்சாதியாம். உள்ள சாதி அத்தனைக்கும் உயர்சாதியாம் அவன்சாதி. இப் பக்கம் வருகிறார்களே இவர்களெல்லாம் இன்னும் எத்தனை எத்தனையோ "மேல்—கீழ்ச் சாதி"யைச் சேர்ந்தவர்கள். ஒன்றிற்கொன்று ஏற்றத் தாழ்வு கொண்டனவாம் இவர்களுடைய சாதிகள். ஒருவர்க்கொருவர் உண்ணல் கலத்தல் இல்லை. ஒருவர்க்கொருவர் திருமணம் கொள்ளல் கொடுத்தல் இல்லை. இந்தப் பாழான சாதிக் கட்டுப்பாட்டால் காதல் பாதையும் தடைப்பட்டுவிட்டது. தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டது. தமிழர் வாழ்வு தழைக்க வேண்டுமானால், செந்தமிழ் நாடு சிறந்து பொலியவேண்டுமானால், பிற நாட்டார் முன்னிலையில் தமிழ் நாட்டார் செம்மாந்து செல்லவேண்டுமானால், உடனடியாக நாட்டைச் செல்லரித்துச் சின்ன பின்னமாக்கும் இப் பலம் பொருந்திய சாதிக் கட்டுப்பாட்டைச் சுட்டுப் பொசுக்கித்தான் ஆக வேண்டும்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

சுதந்தரம் என்றால் ஆரசியல் சுதந்தரம் மட்டுமன்று—பிராமணியக் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை பெற்றுச் சுதந்தரம் அடைதல் வேண்டும். அப்பொழுது தான் நாம் உண்மையான சுதந்தரம் அடைந்த வராவோம். ஏனெனில் பிரிட்டானியம் நம் உடலை மட்டுமே அடிமைப்படுத்திவைத்தது. ஆனால் பிராமணியமோ நமது ஆத்மாவையே அடிமைப்படுத்தி விட்டது; மதத்தின் பேரால் நமது சுயமரியாதையையும் சுதந்தர உணர்ச்சியையும் போக்கிவிட்டது: மக்களுக்குச் சமத்துவம் கொடுக்கவும் மறுக்கிறது. —1926ல் டாக்டர் வரதராசலு நாயுடு.



23—8—47 சனிக்கிழமை

ஆமாம்! ஆனால்!

சென்ற மூன்று நூற்றாண்டுகளாக நம்மை வாட்டி வதைத்துவந்த ஆங்கில ஏகாதிபத்தியம் திராவிடத்தை விட்டுத் தொலைகிறது என்பதை எண்ணும்போது அடங்காத பெரு மகிழ்ச்சி. ஆனால் தொலையும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இடத்தில் அதைவிடப் பயங்கரமான வடநாட்டு வல்லரசு நுழைந்து விட்டது என்பதை எண்ணும்போது உள்ளத்தில் ஊறியெழும் வேதனை. ஒருபுறம் களிப்பு. மறுபுறம் துயரம். ஒரு பால் மகிழ்ச்சி, இன்னொரு பால் நெஞ்சைக் கலக்கும் சேதி. அந்தப் பக்கம் திரும்பினால் பிரிட்டானியத்தின் ஓட்டம். இந்தப் பக்கம் பார்த்தாலோ வடநாட்டுப் பாசிசத்தின் எக்காளம்! இந்த விசித்திரமான சூழ்நிலையில் தான்—இதை விபரீத நிலை என்றும் சொல்லலாம்—இன்று நாம் உலவுகிறோம்.

"ஆள்வதற்கே நான் பிறந்தேன்-என்பால் ஆட்பட்டிருக்கவே நீ பிறந்தாய்" என்று கூரையேறிக் கூக்குரல் இட்டுக்கொண்டிருந்த சர்ச்சிலிசம் இன்று மாண்டு மறைந்து விட்டது. நெஞ்சில் துளியும் ஈரமின்றி பட்டப்பகலில் பஞ்சாப் படுகொலைகளை நடத்திய ஜான்புல் அதோ பிடரியில் கால்பட ஓடுகிறான் சீமையை நோக்கி! பதைக்கப் பதைக்கப் பல்லாயிரம் தமிழர்களைக் கொன்று குவித்த வெல்லிங்டன் பரம்பரையின் தர்பாருக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது இந்நாள்.

துப்பாக்கி அல்லது பீரங்கி இந்த இரண்டு மொழிகள் மட்டுமே எங்களுக்குப் புரியும் என்று சொல்லி வந்த பரங்கியர் ஆட்சி—ஆண்டால் நாங்கள் ஆள்வோம்: இல்லையேல் எங்கள் வெடிகுண்டின் திறம் ஆளும் என்று இறுமாந்து கூறிய வெள்ளை ஏகாதிபத்தியம்—கறுப்பருக்கும் ஆட்சியோ, கனவுலகின் காட்சியோ என்று கேலிச் சிந்து பாடி வந்த சீமைத் துரை அதிகாரம் ஆகஸ்டு 14-ல் முடிந்து விட்டது.

ஆம், வர்த்தகக் கோமான்கள் இந்தியாவில் சிறுகச் சிறுகக் கட்டிவைத்த பலமான பிரிட்டிஷ் கோட்டை அதோ சடசடெனச் சரிந்து வீழ்கிறது—நம் கண் முன்னால் சரிந்து வீழ்கிறது. அதைக் கண்டு நம் உள்ளம் களிப்புக் கடலாடுகிறது. அது இயற்கை தானே! "எப்போதும் சூரியன் அஸ்தமிக்காத" பெருமை வாய்ந்த அந்த ஏகாதிபத்தியத்தின் ஆணவத்தை அழிக்க நாம் சிந்திய கண்ணீர்—உகுத்த குருதி—கொட்டிய வியர்வை—பட்ட பாடு—அடைந்த துன்பங்கள் அத்தனையும் நம் கண் முன்னால் நிழலாடுகின்றனவே. நாம் மகிழாதிருக்க முடியுமா?

எத்தகைய கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்துதற்குப் பெரியார் இராமசாமிகளின் இளமையைப் பலியிட்டோமோ, எந்த அக்கிரமம் பிடித்த அதிகார மமதையை வெட்டிச் சாய்ப்பதற்கு "நாயுடு—நாயக்கர்—முதலியார்" என்னும் மூவருலா நடை பெற்றதோ—எப்படிப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரத்தை மாய்ப்பதற்குப் பட்டாளம் பட்டாளமாகத் தமிழர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பிக் கொடு

தோமோ, எந்த வல்லாட்சியை எதிர்த்து வெள்ளுடை ஞானி தியாகராயர் பதவி மறுப்புச் செய்தாரோ, எந்த அதிகார வர்க்கம் திராவிடருடைய நியாயமான கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்க மறுத்ததோ அதே ஆட்சி-அதே ஏகாதிபத்தியம்—அதே ஆணவம் இன்று கல்லறை நோக்கிச் செல்கிறது எனில் அந்தக் காட்சியின் மாட்சி கண்டு தியாகத் தீயில் குதித்தெழுந்த திராவிட உள்ளம் களித்துக் கூத்தாடாமல் இருக்குமோ?

“ஏகாதிபத்தியமே! உன்னை அழிக்க வீரர் சிதம்பரனாரைப் பறி கொடுத்தோம்! திருப்பூர் குமாரசாமியைத் தடியடிக்குத் தாக்கல் செய்தோம்! ஈரோட்டு வேந்தரென விளங்கிய வைக்கம் வீரரை ஆறுமுறை சிறைக்கனுப்பி அவருடைய கல்லுடலையும் கரையச் செய்தோம்! இன்றோ நீ தொலைகிறாய்—எவ்வளவோ வேதனையை உண்டாக்கி விட்டுத் தொலைகிறாய்-எத்தனையோ தமிழ்க் குடும்பங்களை நசித்து நாசமாக்கி விட்டுத் தொலைகிறாய்—பல்லாயிரவர் வாழ்க்கையை வறண்ட பாலை நிலமாக்கி விட்டுத் தொலைகிறாய்—தமிழர் தலைவர்களைக் கசக்கிப் பிழிந்து விட்டுத் தொலைகிறாய்—ஆனால் நீ தொலைகிறாய், அது மகிழ்ச்சிக்குரியது” என்று திராவிட இனம் இன்று பூரிப்புடன் புகல்கிறது. அது நியாயம்தான். மகிழ்ச்சி எழும்புவது இயற்கைதான்.

ஆமாம்! மகிழ்ச்சி எழும்புவது இயற்கைதான்!

ஆனால்! என்ன வேதனையான சூழ்நிலை! அந்த மகிழ்ச்சி ஒரு விநாடிதான். மறுவிநாடி நம் உள்ளம் எண்ணுகிறது நாம் இன்னும் அடிமைதானே என்பதை. எண்ணியதுதான் தாமதம். கொண்ட மகிழ்ச்சி அத்தனையும் குபீலெனக் கவிழ்ந்து விடுகிறது. வாட்டம் உள்ளத்தை வாட்டுகிறது.

ஆளும் அதிகார வர்க்கம் மாறி இருக்கிறது. ஆனால் ஆளப்படும் பாட்டாளி இனம் முன்போல் தான் அடிமைச் சங்கிலியில் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆலை முதலாளி மாறி இருக்கிறார், ஆனால் ஆலைத் தொழிலாளியின் நிலை அன்று இருந்த தன்மையே தான். மிராசுதார் புதுசு. ஆனாலுமென்ன? பண்ணையாள் பழையபடி உழைத்து உழைத்து உருமாறினாலும் உண்ண உணவின்றி ஓட்டாண்டியாகித் தவிக்க வேண்டியதுதான். இந்த நிலையில் தான்—நாம்—திராவிடர் இன்று இருக்கிறோம்.

இதுவரை மேற்கு நம்மை ஆண்டது. இனி வடக்கு நம்மீது ஆட்சி செலுத்தும். கட்டளை பிறப்பிக்கும் “மேல் இடம்” ஆகஸ்டு 14 நள்ளிரவு வரை ஒயிட்ஹால் அதன் பிறகு வார்தா. “தாங்கீது” சீமைச் சரக்கு முன்னால், இனி அது டில்லிச் சரக்கு. நமது எஜமானர்கள் கொலுவீற்றிருந்த இடம் நேற்றுவரை இலண்டன்மா நகர். இன்றுமுதல் அஸ்தினாபுரி. இதுவரை வெள்ளையர் ஆண்டனர் நம்மை. இனி வட நாட்டுப் பனியாக்கள் ஆள்வர். படேல்களும் பிரசாத்களும் வர்மாக்களும் மிஸ்ராக்களும் ஆள்வர். நேற்றைக்கும் இன்றைக்கும் இடையே உள்ள வேறுபாடு இதுதான். ஆளப் பிறந்தவர்கள் நேற்று வேறு இனத்தவர். இன்று வேறு இனத்தவர். ஆனால் அடிமைப்பட்ட இனம் அன்றும் இன்றும் நாம்தான். சென்ற கிழமை நடந்தது வெற்றி விழாவா அல்லது வேதனை விழாவா என்று திராவிட இனம் கொஞ்சம் சோகம் கலந்த குரலில் கூறிற்று என்றால் அதற்குக் காரணமே இதுதான். ஆங்கிலேயரிடமிருந்து அவன் தட்டிப் பறித்த விடுதலையை இன்று வடநாடு சூறையாடுகிறது என்பதை உணர்ந்த திராவிடன் துயர் உறாமல் ஆனந்தக் களிப்பா பாடிக்கொண்டிருப்பான்

உழவன் ஒருவன், தன்னுடைய அழகிய பண்ணையில் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் புரிந்துவந்த எதிரி ஒருவனை விரட்டினான் நீண்ட நேர போராட்டத்திற்குப் பிறகு. வெற்றிக் களிப்போடு திரும்பினான். பகைவனை முறியடித்த சேதியை ஆசை மனையாளும் அருமைக் குழந்தைகளும் அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடைவர் என்று எண்ணினான். வீரம் ததும்பும் கண்களோடு பார்த்தான் தன்னுடைய கழனியை. எவ்வளவு அருமையான வயல் அதை என்ன பாடுபடுத்தி விட்டான் அந்த முரடன் என்று அவனுடைய வாய் முணுமுணுத்தது. போனது போகட்டும், இனியேனும் களையெடுத்து

சீர்படுத்தி உழுது பயிரிட்டு, விளைவை அறுத்தெடுத்து மகிழலாம் என்று எண்ணினான். அப்படி எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிலேயே மற்றுமோர் மனிதன் அழகிய பயிர் பச்சைகளைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கக் கண்டால்—அதுவும் அம் மனிதன் அவனுடைய நண்பனாக நீண்ட நாள் நடித்து வந்தவனாகவும் இருந்தால் அந்த உழவன் உள்ளம் அப்போது என்ன பாடுபடும்!

இன்பத் திராவிடம் இந்த உழவன் நிலையில்தான் இன்று உள்ளது. ஆண்டு பலவாக அது விடுதலைப் போராட்டம் விளைத்தது. ஆங்கில ஏகாதிபத்யத்தை எதிர்த்து எழுந்து அடலேறு என ஆர்ப்பரித்தது! வீரர்களையும் வீராங்கனைகளையும் அணி அணியாக அனுப்பிற்று போர்க்களத்திற்கு. வேற்று நாட்டினரை விரட்டிற்று, வெற்றியும் பெற்றது. ஆனால் பெற்ற வெற்றிக்கோ பொருள் இல்லாமல் போய்விட்டது. ஹிந்துஸ்தான் கிரகணம் இன்பத் திராவிடத்தின்மீது படர்ந்துவிட்டது. அந்த இருள் வேதனையைத் தருகிறது. வேதனையின் விளைவாக ஆங்கிலேய ஆட்சி தொலைந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் கொஞ்சம் மங்கவே செய்கிறது.

வட நாட்டுச் சிறையில் சிக்கிச் சிதையும் தென்னாடு இன்று ஓர் குமுறும் எரிமலை.

குமுறும் எரிமலை என்றேனும் ஒரு நாள் வீறி வெடித்தே தீரும். இது இயற்கை. இந்த இயற்கையை கேலிச் சித்திரங்களோ கிண்டல் வாசகங்களோ அலட்சியப் பார்வையோ எதுவும் தடுத்து நிறுத்திவிட முடியாது. கொந்தளிக்கும் உள்ளமும் திராவிடர் பண்பாட்டைக் காப்பதற்காகத் துடிதுடிக்கும் இயற்கையும் படைத்த அந்த ஆயிரமாயிரம் திராவிட இளங் காளைகள் எத்தனை நாளைக்குத்தான் தங்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் இனத்தவர் ஆட்சிக்கும் ஏற்பட்டிருக்கும் இழிவையும் மானக்கேட்டையும் பொறுத்துக் கொண்டிருக்க முடியும். இந்த இழி நிலையை இனியும் ஒப்போம் ஒப்போம் என்று அவர்கள் எழுப்பும் பெரு முழக்கில் புதைந்து கிடக்கும் உணர்ச்சிப் பெருக்கைத்தான் யார் அணை போட்டுத் தடுக்க முடியும்?

வெளிநாட்டுப் பிரிட்டானியம் தொலைந்தது போலவே வடநாட்டுப் பாசிசமும் உள்நாட்டுப் பிராமணீயமும் அடியோடு தொலையவேண்டும் என்று அவர்கள் எழுச்சிப் பாசுரம் இசைக்கின்றனர். சிந்திக்கக் கொஞ்சம் திறமையும் சிறிதளவேனும் மான உணர்ச்சியும் படைத்த ஒவ்வொரு திராவிடனும் ஒப்ப முடிந்ததே இது.

திராவிடத்தின் மீதுள்ள வடநாட்டுப் பிடிப்பு அகல வேண்டும். வர்ணாசிரம வல்லரசு மாயவேண்டும். பிறகு கொண்டாடப்பட வேண்டும் விடுதலை விழா. அப்போதே திராவிடர் முழு மகிழ்ச்சி பெறுவர். அப்போதே திராவிடம் களிப்புக் கடலாடும். அப்போதே விடுதலைச் சுடர் பார்க்கும் இடமெங்கும் ஒளி வீசித் திகழும். அதற்கிடையே வரும் விடுதலை விழாக்கள் எவையும் முழு மகிழ்ச்சி தர மாட்டா. துயரக் கோடுகள் படிந்த அரைகுறை மகிழ்ச்சியையே அவை தர இயலும். அவ் விடுதலை விழாக்களில் எல்லாம் **ஆமாம்** என்ற மகிழ்ச்சிக் குரல் மட்டுமே இருக்காது; **ஆனால்** என்ற வேதனைக் குரலும் கலந்தே இருக்கும். அத்தகைய விழாக்களில் ஒன்றே ஆகஸ்டு 15!

கோவைக் குமரன்

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

முஸ்லீம் நாடு தனியாக வேண்டுமென ஜின்னாவும், தமிழ் நாடு தனியாக வேண்டுமென பெரியாரும் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்கின்றனர். பாரத மாதாவைத் துண்டிப்பதா? குழந்தையை வெட்டுவதா? என்று சிலர் கேட்கின்றனர்.

இந்தியா என்ற ஒற்றுமைப்பட்ட ஒருநாட்டை துண்டுபோடுவது சரியா என்றும் கேட்கின்றனர். ஒன்றுபட்ட ஒரு நாட்டைப் பிரிப்பது தவறுதான். இந்தியா என்ற ஒன்றுபட்ட நாட்டைப் பிரிப்பது சரியா என்று கேட்கிறார்களே அந்தக் கேள்வியில் உள்ள வாசகம் சரியா என்று நான் கேட்கிறேன். **இந்தியா ஒன்றுபட்ட நாடா? எந்தக் காலத்திலாவது அரசியல் துறையில் இந்தியா ஒன்று பட்ட நாடாக இருந்ததுண்டா?**

சமஸ்கிருத புராணங்களில் 56 தேசத்து மன்னர்கள் இருந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

அசோகர் இந்தியாவை ஏக தேசமாக ஒன்றுபடுத்தி ஆள

சேனை ஒன்று தேவை!

[இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் தமிழ் நாட்டில் ஊரெங்கும் வீதிதோறும் வீடுதோறும் எழுந்த வீரப்பண் இதோ உள்ளது. மறுபடியும் தென்னாட்டில் அவசர அவசரமாக இந்திமொழி நுழைக்கப்படும் இக் காலத்தில் தமிழர் இப் பாடலை நினைப்பூட்டிக் கொள்வது நல்லது. பாட்டு பாரதிதாசனின் உள்ளம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. பாட்டே சொல்லிவிடும்.]

செந்தமிழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை—பெருஞ்
சேனை ஒன்று தேவை

திரள் திரளாய்ச் சேர்ந்திடுவீர் புரிவம் நல்ல சேவை.
பைந்தமிழை மாய்ப்பதற்கே பகை முளைத்த திங்கே—கொடும்
பகை முளைத்த திங்கே

பாதகரை விட்டு வைத்தால் தமிழர் திறம் எங்கே?
இந்தியினைத் தமிழரிடம் ஏன் புகுத்த வேண்டும்?—இவர்
ஏன் புகுத்த வேண்டும்?

எம்முயிரில் நஞ்சுதனை ஏன் கலக்க வேண்டும்?
சந்தத் தமிழ் மொழியழிந்தால் தமிழர் நிலை விரசம்—நல்ல
தமிழர் நிலை விரசம்.

தமிழர் திறம் காட்டிடுவோம் முழக்கிடுவீர் முரசம்!
ஊமை என நினைத்து விட்டார் ஊர் நடத்த வந்தோர்—நமை
ஊர் நடத்த வந்தோர்.

உளறுகின்றார்; பொருளறியார் சிறு செயல்கள் புரிந்தோர்.
தூய மொழிக்குத் தீமை செய்தார் சயமடைந்ததுண்டோ?-இங்குச்
சயமடைந்த துண்டோ?

தன் மொழியை விலக்கியதோர் சமூகமெங்கே கண்டார்?
நாமும் உயிர் வாழ்வதுண்டோ நம் தமிழைப்பிரிந்தும்—இங்கு
நம் தமிழைப் பிரிந்தும்

நம் தமிழை ஈடழிக்க இந்திவரத் தெரிந்தும்.
“போய் மறைவாய் இந்தி” என்று புகலுகின்றோம் இங்கே—நாம்
புகலுகின்றோம் இங்கே.

புக நினைத்தால் அழிவை என்று முழக்கிடுவோம் சங்கே!
தூரிகையும் எழுதுகோலும் தூய் தமிழர் நாவும்—மிகு
தூய் தமிழர் நாவும்

தொட்டியற்றும் அச்சுச் சாலை மற்றுமுள்ள யாவும்
ஓரிடத்தும் தொடுவதுண்டோ இந்தியிலோர் எழுத்தை—அந்த
இந்தியிலோர் எழுத்தை.

உயர் தமிழன் பகையதுவாம் அறுக்க வேண்டும் கழுத்தை!
நாரிகைகள் குழந்தைகள் நம் கனமறிந்த கிழவர்—நல்ல
கனமறிந்த கிழவர்.

கைத்தொழிலாளா வணிகர் கடல் நிகர்த்த உழவர்
பேரிகை முழக்கிடுவீர் இந்தி எதிர்ப்பீரே
யாவரும் தமிழர்களின் ஆணை எண்ணுவீரே!

8-ம் பக்கத் தொடர்ச்சி.

நினைத்தார். ஆனால் அவரால் தண்டகாரண்யம் வரையில் தான் வர முடிந்தது! அசோகராஜ்யத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. சேர, சோழ, பாண்டிய, சசிபுத்திரர், என நாலு தனி ஆட்சிகள் தென்னாட்டில் அன்று இருந்தன என்றே அசோகர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அக்பரும் இந்தியாவை ஒரு நாடாக்கி ஆளப்பார்த்தார். ஆனால் அக்பர் ஆட்சியிலும் தமிழ் நாடு சேரவில்லை.

அக்பருக்குப் பிறகு என்னயிற்று? அக்பர் ஆட்சியின்போது ஒன்றுபட்டிருந்த வடநாடுகள் கூட தனித்தனியே பிரிந்து போயின.

ஆங்கிலேய ஆட்சியின்போது தான் இந்தியா ஒரேநாடு என்ற கருத்து வந்தது. அதிலும் 75, 80 வருடமாகத்தான் இந்தியா ஒரு நாடு, தாய்நாடு என்ற கருத்து வந்தது.

எனவே இந்தியாவை இந்த “மாபாதகர்கள்” பிரிக்கச்சொல்லுகிறார்களே என்று கூறுவதில் பயனில்லை. இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் ஜின்னாவையும், பெரியாரையும் திட்டுவதால் பயனில்லை. அவர்களைக் கூப்பிட்டு ஏன் உங்களுக்கு இந்தக் கருத்து வந்தது என்று கேட்க வேண்டும்.

போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

தனி இதழ்	ரூபா	0 1 6
ஆண்டு 1-க்கு	„	5 0 0

விவரங்களுக்கு:

போர்வாள் அலுவலகம்,

தமிழா, உன்னைத்தான்!

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

இதோ இப் பக்கம்பார்: இந்த சாதிக் கட்டுப்பாட்டின் கடைக் கோடியில் இருபவர்கள் இவர்கள். உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி, இருக்க இல்லும் வாழ வகையுமின்றி வதைகின்றனர். இவர்கள் தீண்டாதார் என்ற பட்டியலில் பொறிக்கப் பட்டுள்ளனர். மேல் வகுப்புக்காரன் இட்ட பிச்சை இவர்கள் வாழ்வு. இவர்கட்கு வானமே கூரை; தரை மண்ணே தலையணை; வெயிலும் மழையுமே சொத்து சுதந்திரம். உழைப்பு இவர்கள் உரிமை; வறுமை இவர்கள் தோழன்.

திரும்பவும் பார். இதோ வரிசை வரிசையாகச் செல்பவர்கள் ஆலைத் தொழிலாளர்கள். இவர்கள் இடுப்பில் "வேட்டி" உண்டு; ஆனல் அது கிழிந்தது. இவர்கள் தோளில் துண்டு இருக்கும்; அதில் ஆயிரம் பொத்தல் இருக்கும். இவர்கட்கு வீடும் உண்டு; ஆனல் அது வறுமையின் உறைவிடம். அங்குள்ள எலும்புக் கூடுகள் இவர்களுடைய மனைவி மக்கள்.

சிந்தனையில் இச் சித்திரத்தையும் பதிந்து கொள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழுகிறானே கலப்பையும் கையுமாக இவன் பாட்டாளி. வெள்ளிக் காசை இவன் கண்டதில்லை. உலகத்தார்க் கெல்லாம் உணவளிப்போன் இவன்தான்-இவனுக்கு உணவளிப்போரோ இல்லை! சமுதாயம் இவன் உழைப்பின் மீது தான் சமைக்கப்பட்டிருக்கிறது. எனினும் அச் சமுதாயத்திற்குக் கண்ணில்லை இவனைக்காண.

உழவன் அல்ல இவன்; உழைத்து உரு மாறியவன். பாட்டாளி அல்ல இவன்; பாடுபட்டுப் பலன் காணாதவன். உழுவார் உலகத்தாருக்கு ஆணி என்பாய். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவராமே என்பாய். அவை யெல்லாம் கவிஞர் கனவில், வாழ்க்கையில் அல்ல; பாட்டில்; புலவா ஏட்டில்; நாட்டில் அல்ல.

உழவு நாட்டின் உயிர் நாடி. அந்த உழவர் நிலை இது வானல்-நாட்டின் உயிர்நாடி ஒடுக்கப் பட்டு விட்டால் உணவுப் பஞ்சம் ஏன் வராது?

தமிழா நீ குடிசை வீட்டைக் கண்டாய். குந்தக் குடிசை இன்றித் தவித்துத் தேங்குவாரையும் கண்டாய். ஒடிந்த உள்ளம், உழைத்துழைத்து ஓய்ந்துபோன உடல், வறண்ட வாழ்க்கை இவற்றை யெல்லாம் பார்த்தாய். வேண்டுமானல் நீ மாடமாளிகைகளையும் காணலாம். அங்கு "உல்லாசப் பவனி" வரும் செல்வச் சீமான்களையும் காணலாம். ஆனல் ஒன்றை நெஞ்சில் நிறுத்து. அங்கு மாட மாளிகைகள் இருப்பதால்தான் இங்கு ஓலைக்குத் தக் குடிசைகள் ஏற்பட்டன. அங்குச் செல்வச் சீமான்கள் இருப்பதன் விளைவுதான் இங்குள்ள "ஒடிந்த உள்ளங்கள்." அந்த செல்வத்தில் பிறந்தது தான் இந்த வறுமை. அந்த "உயரப்பர்" ஒழிந்தால் இந்த "ஓடப்பர்" ஒழிவர். தமிழா நீ இருவரையும் ஒழித்து விடு. "ஒப்பப்பரே" பிறகு எங்கும் இருப்பர்.

இளந்தமிழா, இதனையும் பார்: பொய்யான கலையின் புன்னகைப் பூஞ்சோலை இது. கல்லூரி என்றும் சொல்வார்கள் இதனை. பல்கலைக் கழகம் என்ற பெரும் பெரும் பெயரும் உண்டு. நாட்டின் அறிவூவளர்ச்சிக்கு அடிப்படை இதுதானே என்பாய் நீ. இல்லை. இரவில் படித்ததைப் பகலில் ஒப்பிக்கும் பட்டதாரிகளின் வளர்ப்புப் பண்ணை. நாட்டின் ஆராய்ச்சி வளரவும், அறிவு பெருகவும், தொழில் சிறக்கவும்,

மக்கள் வாழவும் வழி வகுக்
வேண்டிய இக்கலைக் கூட
கள் இந்த நாட்டில் பட்ட
மளிப்பு விழாக்களிலேயே த
கள் கருத்தைப் பதித்து வி
டன. பின், நாட்டில் அறி
வளர்ச்சியும் தொழிற் பெருக்
மும் இல்லை என்றல் எப்ப
இருக்கும்?

இங்குவா. செந்தமிழ் மொ
யைச் "சீர்திருத்தும்" இ
றைய எழுத்தாளர்கள் இவர்கள்
இவர்கள் மொழியிலே "ம
மலர்ச்சி" இருக்கிறதாம்; ஆன
தமிழ் காணோமே! இவர்க
நடையில் "ஓட்டம்" இரு
கிறதாம்; ஆனல் "உயிர்"
இல்லையே! "எங்கள் மொ
நடையிலே பாவம் இருக்கிறது
புதுப் பாணி இருக்கிறது" என்
றெல்லாம் அவர்கள் சொல்
றார்கள். அவை இருக்கின்
றனவோ இல்லையோ வட சொ
கலப்பு நிறைய இருக்கின்றது
"அடையும் இவை அத்தனையு
கழித்துப் பார்க்குங்கால், (அவ
கள் நடையில்) அத்திம்பேர் அ
மாமி எனும் தமிழ்தான் மீதம்.

இளந்தமிழா, கேள்: இ
அத்தனையும் உன் நாட்டுக் கா
சிகள் நாம். அடிமைத்தளை பூ
டப்பட்டு விட்டது உன் நா
டார் பால்—தமிழர் பால். இ
அடிமைத் தளைகளை அ
தெறிய வேண்டும்—இது உ
கடன். தமிழ்நாட்டின் து
தோறும் பழமைப் பாசி படர்
விட்டது; அதை எடுத்தெறி
வேண்டும்—இது உன் பணி
சினறு பின்னப் பட்டுக் கிட
கும் செந்தமிழர் சமுதாயத்
மாற்றி அமைத்து மறுகோல
செய்ய வேண்டும்—இது உ
தொண்டு. ஆண்டான்—அ
மைத் தத்துவத்தை முறியடி
வேண்டும்—இது உன்னல் மு
யும். இத்தனைக்கும் உன் நா
உன்னை நாடுகிறது. இள
தமிழா! துள்ளி எழு

சிதைந்த தமிழகம் சீர்பெற வேண்டின்!

இப்படி இருக்காதீர்கள்!

விநாயக சதுர்த்தி அன்று இருப்பதைப் போல் களிமண்ணுங் கையுமாக இருக்காதீர்கள்; களிமண் கையைக் கறையாக்குமே தவிர நாட்டுக் குறையைத் தீர்த்துவிடாது.

தீபாவளியன்று இருப்பதைப்போல, பட்டாசும் கையுமாக இருக்காதீர்கள்; பட்டாசு ஜப்பானுக்கும் சீனுவுக்கும் வியாபாரத்தைப் பெருக்குமே தவிர நம் நாட்டுப் பொருளாதார மந்தத்தைப் போக்காது.

கார்த்திகை விழாவன்று இருப்பதைப் போல் அகல் விளக்கும் கையுமாக இருக்காதீர்கள். இருண்ட வீட்டிற்குக்கூட முழு வெளிச்சம் தரமுடியாத அகல் விளக்கு, நாட்டிலே கவிந்து கொண்டுள்ள இருட்டைப் போக்கிவிட முடியாது.

நவராத்திரியன்று இருப்பதைப்போல கொலுப் பொம்மையும் கையுமாக இருக்காதீர்கள்; கொலுப் பொம்மை வயதான பெரியவர்களும் பிள்ளை விளையாட்டு ஆடுகிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகப் பயன் படுமே தவிர, குழந்தைகள் விளையாடக் கூட பயன் படாது.

சரஸ்வதி பூசையன்று இருப்பதைப்போல புத்தகத்தைப் பூசை செய்வதும் கையுமாக இருந்துவிடாதீர்கள்; புத்தகப் பூசை அறிவைத் துலக்கி ஆராய்ச்சியை வளரவிடாது. மூடநம்பிக்கையைத் தான் வளர்க்கும்.

நல்வினை தீவினைகளில் பொருளற்ற சடங்குகளும் கையுமாக இருந்துவிடாதீர்கள்; சடங்குகள் சமுதாயத்தை முன்னேற வொட்டாது தடுக்கும் முட்டுக் கட்டைகள்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பொய்ப் புராணமும் கையுமாக இருந்து விடாதீர்கள். புராணங்கள் பழமைக்குப் படைவீடுகள்!

இப்படி இருங்கள்!

புரட்சியும் கையுமாக இருங்கள்; வருணாசிரம வல்லரசை வீழ்த்த பலப்பல புரட்சிகள் தேவை.

பகுத்தறிவும் கையுமாக இருங்கள்; இருட்டறையில் உள்ள திராவிடத்தை வெட்ட வெளிக்குக் கொண்டுவர பகுத்தறிவுப் பிரசாரம் மிகமிகத் தேவை.

ஆராய்ச்சியும் கையுமாக இருங்கள்; மக்கள் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்ட பழமை உணர்ச்சியை விரட்டியடிக்கும் வல்லமை வாய்ந்த ஒரே ஒரு ஆயுதம் ஆராய்ச்சிதான்.

சீர்திருத்தமும் கையுமாக இருங்கள்; இன்றைய சமுதாயத்தை அடியோடு மாற்றி அமைத்துப் புதுக்கியாகவேண்டும்.

புரட்சி! பகுத்தறிவு! ஆராய்ச்சி! சீர்திருத்தம்! இந்த நான்கும் தமிழ்நாட்டில் பவனி வர வேண்டும். அப்போதுதான் புதிய தமிழகம் உருவாக முடியும். அப்போதுதான் "எல்லார்க்கும் எல்லாமும் இருப்பதான இடம்" நோக்கித் தமிழகம் செல்லமுடியும். அப்போதுதான் சாதி மத பேதம்எனும் கட்டுப்பாடுகள் மடமட வென முறிந்து வீழும்.

அந்த நிலையை உண்டாக்குங்கள். தமிழ்நாடு முழுவதும் தன்மான முழக்கத்தை எழுப்புங்கள். பொருளற்ற பழக்க வழக்கம் எனும் சற்றுச் சூழல்களைச் சிதறடியுங்கள். பகுத்தறிவுப் பாதையில் தமிழகத்தைச் செலுத்துங்கள்—அது இனிவரும் உலகத்திற்கு உங்களை அழைத்தேகும்.

நிர்மல கீதம்

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

நான் "நிர்மலா என்றேன்" அவள் "நான் வெறும் நிர்மலா இல்லை. உங்கள் நிர்மலா" என்றாள் திணறிக் கொண்டே. அவள் இதழ்க் கடையில் புன்னகை அரும்பியது.

மாமா தண்ணீர்கொண்டுவந்தார். அவள் மறுபடியும் இருமத் தொடங்கினாள், அவள் தவிப்பு என்னை வாட்டியது. மாமா அவள் வாயில் தண்ணீர் ஊற்றினார். நிர்மலா திணறிக் கொண்டே குடித்தாள். அவள் கண்கள் வேகமாகச் சுழன்றன. மூச்சுத் திணறிற்று. அவள் என்னை ஒரு கணம் பார்த்தாள். பிறகு கண்ணை மூடிக்கொண்டாள்.

நிர்மலா பிறகு பேசவே இல்லை. அவள் நினைவுலகத்தை விட்டுக் கனவுலகத்திற்குச் சென்றாள்; என்னை மறந்துவிட்டாள்.

மாமா "நிர்மலா" என்று அலறினார். நான் கதறினேன். கண்ணீர் விட்டேன். அவளைப் பலமுறை கூப்பிட்டேன்.

மாமி ஓடோடியும் வந்தாள்; "நிர்மலா" என்றழுது புரண்டாள்.

என் உள்ளம் இசைத்து வந்த நிர்மல கீதம் காற்றுடன் காற்றாய்க் கலந்து கலந்து விண்ணிடைச் சென்று சேர்ந்தது.

என் அருமை நிர்மலாவின் முகத்தை உற்று நோக்கினேன். அவள் முகத்தில் சாந்தி நிரம்பிஇருந்தது.

"உன் நிர்மலாவா அவள்?" என்று என் இதயம் என்னைக் கேட்டது. நான் என்ன சொல்வேன்! எனக்கென்ன தெரியும் சொல்ல!

போகிறார்! போகட்டும்!

சசி வோத்தம சர், சி. பி. இராம ஸாமி அய்யர் அவர்கள் திருவிதாங்கூர் திவான் பதவியை உதறித் தள்ளி விட்டாராம். அதை "மகா ராஜா"வும் ஒப்புக் கொண்டு விட்டாராம். எனவே சர். சி. பி. திருவாங்கூரையே விட்டுத் தலை முழுகி விட்டு உதக மண்டலத்திற்கு உடல் நலத்தை முன்னிட்டு உடனே 'போய் விட்டாராம்' போகட்டும் போகட்டும் தாராளமாக போய் வரட்டும். "கோடி புண்ணியம்" அவருக்கு. இனியேனும் திருவிதாங்கூரில் ஜனநாயக ஒளி வீசட்டும். பொறுப்பாட்சி மலரட்டும். மக்கள் மன்றம் களிக்கட்டும். தடியடி தர்பார் நிற்கட்டும்.

சாந்தியும் சமாதானமும் அமைதியும் ஆநந்தமும் எங்கணும் பரவட்டும். அதிகார பீடத்தின் உறுமலுக்கும் உருட்டலுக்கும் கூட ஓர் இறுதி அத்தியாயம் உண்டு என்பதை சர். சி. பி. யின் வீழ்ச்சி நாடெங்குமுள்ள "பொம்மை ராஜா"க்களுக்கு உணர்த்தட்டும். திருவிதாங்கூர் போலீசுக்கும் கொஞ்சம் ஓய்வு கிடைக்கட்டும். அங்குள்ள சிறைச் சாலைகளும் காலியாகட்டும்.

தத்துவ விசாரணையாம்!

இனிமேல் சர். சி. பி. இலக்கிய ஆராய்ச்சியிலும் தத்துவ விசாரணையிலும் வேதாந்த விளக்கத்திலும் தம் காலத்தைச் செலவிட முடிவு செய்து விட்டார் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. நமக்கும் மிக மகிழ்ச்சி அதுகேட்க. ஆனால் ஒன்று. அவருடைய இலக்கிய ஆராய்ச்சியை அவருடைய அருமந்த சமஸ்கிருதத்தோடு நிறுத்திக் கொள்ளட்டும். அனுஷ்டா என்ற வட சொல்லில் இருந்து ஆணி என்ற தமிழ்ச் சொல் பிறந்தது என்று முன் ஒரு முறை "தலைகீழ் வாதம்" புரிந்தாரே அத்தகைய தமிழ் ஆராய்ச்சி மட்டும் வேண்டாம். காரணம், தமிழர் முன்போல் இல்லை. இப்போது விழித்துக் கொண்டிருக்கின்றனர்.

தங்கத்தில் செங்கோல்!

திருவாவடுதுறை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நதிகள் அருமையான காரியம் ஒன்றைச்செய்து முடித்திருக்கிறார். உச்சியில் ரிஷபம்—5 அடி உயரம் அழகிய வேலைப் பாடு—அருமையான தோற்றம் இவ்வளவும் கொண்ட தங்கத்தாலேயே உருக்கி வார்க்கப்பட்ட செங்கோல் ஒன்றை ஹிந்துஸ்தான் பிரதமர் பண்டித நேருவுக்கு அன்பளிப்பாக அளித்திருக்கிறார் அவர். பிரதமர் நேரு தன் இருப்பிடத்திலிருந்து அர்சாங்க மாளிகைக்கு ஆகஸ்டு 14 நள்ளிரவில் புறப்பட்டார் அல்லவா அப்போது மடத்துப் பரிவாரங்கள் பூரண கும்ப மரியாதைகளுடன் தங்கச் செங்கோலை அவரிடம் சமர்ப்பித்தனர் என்று தெரிகிறது. "இந்தியாவின் முடி சூடா மன்னருக்கு, பக்தா, தங்கத்தால் செங்கோல் செய்து உடனே அனுப்பு" என்று பார்வதி சமேதராக பரமசிவன் வந்து அம்பலவாணர்தம் கனவில்அருள்பாலித்து விட்டுப் போனார் என்பதாகக் கேள்வி. அது எவ்வளவு தூரம் உண்மை என்று நமக்குத் தெரியாது.

சர்வம் புரோகித மயம் ஹிந்த்!

இந்தியாவில் குடியேற்ற நாட்டுரிமை, ஏற்பட்டதே சென்ற கிழமை அதனுடன் கூடவே சேர்ந்து கொண்டு பலமான புரோகித ஆதிக்கமும் ஏற்பட்டுவிட்டதோ என்று ஐயுற வேண்டி இருக்கின்றது. ஏனெனில் அதன் பிறகு நிகழ்ந்த முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் புரோகிதர்களுக்கு ஒரு சிறப்பிடம் கொடுக்கப்பட்டே இருக்கிறது. புது ஆட்சியின் துவக்கமே பஞ்சாங்கத்தில்தான். ஆகஸ்டு 15 காலையில் தான் அதிகார மாற்றச் சடங்கு நிகழ்ந் திருக்க வேண்டும் அட்லி அறிக்கையின் படி. ஆனால் காலப் பொருத்தம் சரியில்லை அப்போது என்று புரோகிதர்கள் ஒரே யடியாகச் சாதிக்கவே ஆகஸ்டு 14 நள்ளிரவிற்கு விழா மாற்றப் பட்டது.

ஐக்கிய மாகாணத்தின் புது கவர்னர் ஆட்சிப் பீடம் ஏறியதும் வேதவிற்பன்னர்கள் "சாஸ்திரோக்தமான" சடங்குகளை நடத்தி வைத்தனர்.

மற்றொரு மாகாணத்தில் கவியரசி சரோசனி தேவியார் கவர்னர் பதவி ஏற்குமுன் வேதகோஷம் முழங்க உபநிஷத் வாக்கியங்கள் உடன் ஒலிக்க சமஸ்கிருத சுலோகங்கள் எழும்பின.

புது டெல்லியில் பண்டித நேருவும் ராஜன் பாபுவும் மற்ற பல மந்திரிகளும் ஹோம குண்டம் ஒன்றன் முன் அமர்ந்து வணக்கம் செலுத்தினர். எட்டு புரோகிதர்கள் ஓமம் வளர்த்தனர்.

இது போன்ற செய்திகள் அடுக்கடுக்காக வருகின்றன பத்திரிகைகளில். எனவே தான் போலும் "சர்வம் புரோகித மயம் ஹிந்த்" என்கிறான் நம் ஆபீஸ் பையன்.

தீர்மானம் தோற்றது

அரசியல் ஆக்க மன்றத்தின் மைசூர் உறுப்பினர் தோழர் செஞ்சையா இந்தியாவின் குடி ஆட்சித் தலைவர் ("பிரசிடென்ட்") ஓர் ஆண்டுக்கு வடநாட்டவர் மறுஆண்டுக்குத் தென்னாட்டவர் என்ற முறையில் மாறி மாறி வரவேண்டும் என்றோர் தீர்மானம் கொண்டு வந்தார் சென்ற திங்கள். அதை அரசியல் நிர்ணயசபை தோற்கடித்து விட்டது. அதில் என்ன வியப்பு! அரசியல் நிர்ணய சபை இருக்கும் இடம் டெல்லி தானே! அங்கே தென்னிந்தியர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்குமென்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்?

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers, 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)